# கொழும்புப் பல்கலைக்கழகம் - கல்விப்பீடம்

## கல்விமாணிப்பட்டக் கற்கைநெறி பகுதி II முதலாம் பருவம் - 2019

### B.Ed 3103 ஒப்பீட்டுக் கல்வி

நேரம் மூன்று (03) மணித்தியலங்கள்

பகுதி i இல் உள்ள ***எல்லா வினாக்களுக்கும்*** பகுதி ii இல் விரும்பிய ***நான்கு (04) வினாக்களுக்கும்*** விடை தருக

### பகுதி i

1. ஒப்பீட்டுக்கல்வியின் பரப்புக்கள் மற்றும் நிலைமைகள் பற்றிச் சுருக்கமாகக் கலந்துரையாடுக
2. குரு இல்லக் கல்வி முறையில் பயன்படுத்தப்பட்ட இரண்டு கற்பித்தல் சாதனங்கள் மற்றும் மூன்று பாடநூல்களின் பெயரைத் தருக
3. போர்த்துக்கீசர் காலத்தில் காணப்பட்ட பரீஸ் பாடசாலைக்கும் ஒல்லாந்தர் காலத்தில் காணப்பட்ட பரிஸ் பாடசாலைக்கும் இடையிலான வேறுபாடுகள் ஐந்து தருக
4. சட்டசபை உப குழு (மோகன் குழு) அறிக்கையில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் ஐந்து தருக
5. மலேசியாவின் கல்வி முறையில் காணப்படும் பிரதான பண்புகள் ஐந்தினைக் குறிப்பிடுக
6. 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலகத்தரம்மிக்க கல்வி முறையொன்றைக் கட்டியெழுப்புவதற்காக சீனக் கல்வி அதிகார சபை முன்னெடுத்த உபாயங்கள் ஐந்தினைச் சுருக்கமாக கலந்துரையாடுக
7. 1981 ஆம் ஆண்டின் கல்வி வெள்ளை அறிக்கையில் முன்வைக்கப்பட்ட சீர்திருத்தங்கள் ஐந்தினைத் தருக
8. இலங்கையில் பால்நிலை சார்ந்த பிரச்சினைகளுடன் தொடர்புடைய காரணிகள் பற்றிச் சுருக்கமாக கலந்துரையாடுக

(8x5= 40 புள்ளிகள்)

## பகுதி ii

9 கிராமப் பாடசாலைகள், கோயில்ப் பாடசாலைகள் மற்றும் பிரிவேனாப் பாடசாலைகள் என்பவற்றை விசேடமாகக் கருத்தில் கொண்டு இலங்கையின் புராதனக் கல்வி முறையில் காணப்பட்ட பிரதானமான அம்சங்களை விளக்குக

(15 புள்ளிகள்)

10 i ஆரம்ப, இடைநிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியை விசேடமாகக் கருத்திற் கொண்டு வளர்முக நாடுகளின் கல்வி முறையைச் சுருக்கமாக விளக்குக

(07 புள்ளிகள்)

ii வளர்ந்த நாடுகளின் கல்வி முறையின் பலமான மற்றும் பலவீனமான அம்சங்களை ஆராய்க

(08 புள்ளிகள்)

11 i "மனித சமூகங்களில் கல்வியானது இனரீதியான பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்வதற்கு உதவுகிறது" பல்கலாசாரக் கல்வி என்ற எண்ணக்கருவை கருத்திற் கொண்டு மேற்படி கூற்றின் நம்பகத் தன்மை பற்றி ஆராய்க

(08 புள்ளிகள்)

ii இலங்கையில் இனரீதியான பிரச்சினைகளை குறைத்துக் கொள்வதற்கு கல்வி எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதை விளக்குக

(07 புள்ளிகள்)

12 i கல்வியானது எவ்வாறு இளைஞர் அமைதியின்மையுடன் தொடர்புபடுகிறது என்பதை உதாரணங்கள் தந்து விளக்குக

(07 புள்ளிகள்)

ii பால்நிலையுடன் தொடர்புடைய முரண்பாடுகளை விளக்கி, விசேடமாக இலங்கையை மேற்கோள்காட்டி இம் முரண்பாடுகளின் புதிய செல்நெறியை ஆராய்க

(08 புள்ளிகள்)

13 i கல்வியின் பொருளாதாரப் பெறுமதியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் முறைகளை ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் விளக்குக

(07 புள்ளிகள்)

ii கல்விக்கும் பொருளாதாரத்துக்கும் இடையிலுள்ள தொடர்பற்ற நிலைமைகளை இல்லாது செய்வதற்காக எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளைக் கலந்துரையாடுக

(08 புள்ளிகள்)

14 i 1943 ல் கலாநிதி C.W.W கன்னங்கரா அவர்களால் முன்வைக்கப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் பிரதான அம்சங்களைக் கலந்துரையாடுக

(08 புள்ளிகள்)

ii சமூக மற்றும் பொருளாதார ரீதியாக சமூகமானது மாற்றமடைய இச்சீர்திருத்தங்கள் எவ்வாறு உதவின என்பதை விளக்குக

(07 புள்ளிகள்)

15 i 1944 ஆம் ஆண்டின் பட்லரின் கல்விச் சீர்திருத்தத்தை கருத்திற் கொண்டு பிரித்தானிய சமூகத்தின் சமூக, பொருளாதார நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடுக

(08 புள்ளிகள்)

ii பட்லரின் கல்விச் சீர்திருத்தத்தின் விளைவாக நிகழ்ந்த கல்வி தொடர்பான மாற்றங்களைக் குறிப்பிட்டு இச் சிர்திருத்தத்தினால் சமூகத்துக்குக் கிடைக்கப்பெற்ற நன்மைகளை ஆராய்க

(07 புள்ளிகள்)

16 i 1972 ஆம் ஆண்டின் கல்விச் சீர்திருத்தத்தின் பிரதானமான அம்சங்களை விபரிக்குக

(08 புள்ளிகள்)

ii இலங்கையின் கல்வி முறையில் மேற்படி கல்விசசீர்திருத்தமானது எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்தியது என்பதை தர்க்க ரீதியாக ஆராய்க

(07 புள்ளிகள்)

*********